# வாழ்க நம் தளபதி! வெல்க திராவிட நாயகர்!

1953 மார்ச்1, என் பாசமிகு தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருமகனாக தளபதி அவர்கள் தோன்றிய திருநாள்! 2025 மார்ச்1, தளபதி அவர்களுக்கு 72வது பிறந்த நாள்! இந்தியத் திருநாடு புகழும் நம் தாய்த் தமிழ்நாட்டின் தனித்தன்மை காக்கும் தன்னிகரற்ற முதலமைச்சராய்த் திகழ்கிறார் நம் தளபதி அவர்கள்!

இந்த 72 ஆண்டுகளில் தளபதி அவர்களின் வாழ்வில் பல ஏற்றங்களும் உண்டு இடர்தந்த பல இடிகளும் உண்டு! இடிகளாயினும் அவற்றை ஏறப் பயன்படும் படிகளாக படிக்கட்டுகளாக மாற்றி உயர்ந்தவர் தளபதி !

உலகத் தமிழினம் பெருமை கொள்ளும் உன்னதத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்! ‘உழைப்பு, உழைப்பு, உழைப்பு’ மும்முறை கூறி உழைப்பின் மறுவடிவம் என்றே வியந்து போற்றிய வீரர் நம் தளபதி அவர்கள்!

### தளபதியின் தியாக நெஞ்சம்

1971ஆம் ஆண்டு கோவையில் மாணவர் தி.மு.க. மாநாடு! “மாணவச் சிங்கங்களே அன்னை மொழிகாக்கும்அறப்போரில்எத்தகையதியாகத்திற்கும் நீங்கள் தயாராக வேண்டும். உயிர்தான் விலையென்றால் அதனையும் தரவேண்டும்” என அறைகூவல் விடுத்துப் பேசினார் அன்றைய மாணவர் படைத் தளபதி எல்.ஜி. எனும் எல்.கணேசன் அவர்கள். அடுத்துப் பேச வந்த மாணவச் சிங்கம் - நம் தளபதி அவர்கள்,

**“அண்ணன் எல்.ஜி. அவர்களே, நீங்கள் விடுத்த அறைகூவல்படி உருவாகும் அந்த மாணவர் பட்டாளத்தில் என்னையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.**

**அது, தியாகத்தின் பட்டியலாக இருந்தாலும் அதிலேயும் என்னைச் சேர்த்துக் கொள்வதற்கு நீங்கள் ஆணையிட வேண்டும்! மொழிக்காக எதையும் இழக்கத் தயார்! இனத்திற்காகப் போராடுகிறோம்! போராடுகிற நேரத்தில் நம் உயிரை இழக்கின்ற தியாகத்தைச் செய்வதற்குக்கூடக் காத்திருக்கிறோம்! என்னுடைய தந்தைக்கு நான்கு ஆண் பிள்ளைகள். அந்த நான்கு ஆண் பிள்ளைகளில் - ஒரு ஆண் பிள்ளை போய்விடுவதால் என் தந்தை கவலைப்படமாட்டார்.**

**அதுவும் மொழிக்காக, இனத்திற்காகத் தனயனை இழந்த தந்தையென்று என்னுடைய தந்தைக்குப் பாராட்டுகள் கிடைக்கும். அப்பெருமையை வாங்கித் தந்த மகிழ்ச்சி எனக்கும் கிடைக்கும் அல்லவா?”**

இப்படி ஆவேசம் பொங்கிட முழங்கி ஆர்வத்தை வெளிப்படுத்திய நம் தளபதி அவர்களுக்கு அன்று வயது 19. இன்றைக்கு 54 ஆண்டுகளுக்கு முன் மொழியுரிமைக்குப் போர்க்குரல் தந்த தளபதி அவர்கள்தான் - இன்றும் தமிழ்மொழி உரிமைக்காக; தமிழின உரிமைக்காக; தமிழ் நாட்டு உரிமைக்காக ஒன்றிய அரசிடம் உரிமைக்குரல் எழுப்பி வருகிறார். தமிழரின் கவசமாகத் திகழ்கிறார்!





தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் அன்னைத் தமிழ் மொழியைக் காப்பதில் அன்று 19 வயது மாணவப் பருவத்தில் இருந்த அதே உணர்வு இன்று 72வது வயதிலும் அதிவேகத்துடன் துடித்துக் கொண்டிருப்பதை நம்மால் காணமுடிகிறது.

பள்ளிக் கல்வித் துறையில் செயல்படுத்தப்படும் சமக்ர சிக்ஷா திட்டத்திற்கு ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு அளிக்க வேண்டிய ரூ.2152 கோடி நிதியை விடுவிக்க வேண்டுமென்று கோரினால், “தமிழ்நாடு புதிய கல்விக் கொள்கையை - மும்மொழிக் கல்வித் திட்டத்தை - இந்தியை ஏற்றுக் கொண்டால்தான் நிதி தர முடியும்” என அரசியல் சட்ட நெறிமுறைகளுக்கு மாறாகப் பதில் சொல்கிறார் ஒன்றிய அமைச்சர்.

அதைக் கண்டித்து, தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் கடலூர் மாநகரில் மஞ்சகுப்பம் மைதானத்தில் அரசு விழாவில் 21.2.2025 அன்று உரையாற்றுகையில், **“தமிழுக்கும், தமிழ்நாட்டிற்கும், தமிழினத்திற்கும் எதிரான எந்தச் செயலும் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் இருக்கும் வரைக்கும் இந்த மண்ணுக்குள் வர முடியாது”** - என்று அழுத்தம் திருத்தமாக ஆவேசத்துடன் முழங்கினார்கள்.

19 வயதில் இந்தித் திணிப்பை எதிர்த்து அன்று முழங்கிய அந்த முழக்கத்திற்குக் கிஞ்சித்தும் குறைந்ததல்லவே இந்த ஆவேச முழக்கம்!

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2021ல் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாட்டின் முன்னேற்றம் குறித்தும், தமிழ்நாட்டு மக்களின் வளமான நல்வாழ்வு குறித்தும், இளைஞர்கள், இளநங்கையர்களின் ஒளிமயமான எதிர்காலம் குறித்தும், ஆழ்ந்து சிந்தித்து, புதியபுதிய திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றி வெற்றிபெற்று வருகிறார்கள். ஒன்றிய அரசின் நிதி ஆயோக் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளே தமிழ்நாடு அரசைப் பாராட்டி வருகின்றன. ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையிலும், பா.ஜ.க ஆளும் மாநிலங்களிலும் திராவிட மாடல் அரசின் திட்டங்கள் பின்பற்றப்படுகின்றன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒரு கோடியே 15 இலட்சத்து 600 இல்லதரசிகளுக்கு மாதம் 1,000 ரூபாய் வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்புவரை படித்து, உயர் கல்வியில் சேரும் மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் மாதம் 1,000 ரூபாய் வழங்கும் “புதுமைப் பெண்”, “தமிழ்ப் புதல்வன்” திட்டங்கள், அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை படிக்கும் 20 இலட்சத்திற்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு நாள்தோறும் வழங்கப்படும் சூடான, சுவையான காலை உணவுத் திட்டம், மகளிர்க்குக் கட்டணமில்லா விடியல் பேருந்து பயணத் திட்டம் முதலான ஏழை எளியோர் பயன்பெறும் அருமையான திட்டங்களை எல்லாம் பல ஆயிரம் கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றி வெற்றி கண்டு பாராட்டுகளைக் குவித்து வருகிறார்கள்!



அமைச்சர்
**கே.என்.நேரு**
கழக முதன்மைச் செயலாளர்

ஏழை எளியவர்களின் வாழ்க்கைத் தரம் உயர கலைஞர் கனவு இல்லம் திட்டம்; நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் வாயிலாக இலட்சக்கணக்கானவர்கள் வீட்டுவசதிகள் பெறுகிறார்கள். ஒரு வீட்டிற்கு ரூ.3.50 இலட்சம் மானியம் வழங்கப்படுகிறது.

முதலமைச்சர் அவர்கள் அளித்துவரும் ஊக்கம் காரணமாக ஊராட்சிகள் பேரூராட்சிகளாகவும், பேரூராட்சிகள் நகராட்சிகளாகவும், நகராட்சிகள் மாநகராட்சிகளாகவும் மேம்பாடு காண்கின்றன. இந்த வளர்ச்சிகள் காரணமாக மக்களுக்குக் குடிநீர் வசதி, சாலை வசதி, மழைநீர் வடிகால் வசதி, நகர்ப்புறச் சுகாதார வசதிகள் எல்லாம் பெருகி வருகின்றன. நகர்மயமாதலில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக உயர்ந்துள்ளது. இவற்றின் பயனாக தமிழ்நாடு அனைத்து வகையிலும் பாராட்டத் தக்க வகையில் முன்னேற்றம் கண்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2021க்குப்பின் உருவாக்கிய திட்டங்கள் பயிர்களாக வளர்ந்து பயன்தந்து திராவிட மாடல் ஆட்சி தந்துள்ள முன்னேற்றங்களின் அடையாளங்களின் பட்டியல்களில் சில இதோ!

**இந்தியாவில் உயர்கல்வியில் முதல் மாநிலம் தமிழ்நாடு!**

**தொழில் வளர்ச்சியில் முன்னணி மாநிலம் தமிழ்நாடு !**

**ஆயத்த ஆடைகள் ஏற்றுமதியில் முதல் மாநிலம் தமிழ்நாடு !**

**ஜவுளித் துணிகள் ஏற்றுமதியில் முதலிடம் தமிழ்நாடு !**

**மருத்துவத் துறையில் முன்னணி மாநிலம் தமிழ்நாடு!**

**மகளிர் முன்னேற்றத்தில் தமிழ்நாடு முதலிடம் !**

**மகப்பேற்றுக்குப் பிந்தைய சிசு கவனிப்பில் முன்னணி மாநிலம் !**

**வேளாண் உற்பத்தியில் முன்னணி மாநிலம் தமிழ்நாடு !**

**தோல் பொருள்கள் ஏற்றுமதியில் தலைசிறந்த மாநிலம் தமிழ்நாடு !**

**மின்னணுப் பொருள்கள் ஏற்றுமதியில், தமிழ்நாடு முதலிடம் !**

**பொறியியல் பொருள்கள் ஏற்றுமதியில், தமிழ்நாடு இரண்டாம் இடம் !**

**தொழில் வளர்ச்சிக்கான 50 சிறப்புப் பொருளாதார மண்டலங்களை ஏற்படுத்தியதில் தமிழ்நாடு முதலிடம் !**

இவை எல்லாம் ஒன்றிய அரசின் நிதி ஆயோக் நிறுவனம் வெளியிட்டுள்ள ஆய்வு அறிக்கைகளில் கிடைத்துள்ள திராவிட நாயகர் ஆட்சியின் சாதனைகளாகும்.

இப்படி, ஒன்றிய அரசின் ஆய்வு அறிக்கைகளே பெரும்பாலான முக்கியத் துறைகளில் தமிழ்நாடு இந்தியாவில் முதலிடம் பெற்றுள்ளதை உறுதிப்படுத்துகின்றன என்றால் இவற்றுக்கெல்லாம் முதலமைச்சர் திராவிட நாயகர் அவர்கள்தான் முழுமுதல் காரணம்! அதனால்தான், தமிழ்நாடு பொருளாதாரத்தில் இந்தியாவில் இரண்டாம் இடம் பெற்று மிளிர்கின்றது. **அல்லும் பகலும் அயராது ஒல்லும் வகையெல்லாம் தமிழ் மொழியும், தமிழ்ச் சமுதாயமும், தமிழ்ப்பண்பாடும் வளம்பெற - வலிமை பெற வேண்டும் என்னும் உணர்வோடு உழைப்பதனால்தான் திராவிட நாயகர் அவர்களைத் தமிழ் மக்கள் பாராட்டுகிறார்கள்! அண்டை மாநிலங்கள் பாராட்டுகின்றன! இந்திய நாடே பாராட்டுகிறது! உலக நாடுகளும் பாராட்டுகின்றன! நாமும் பாராட்டி வாழ்த்திப் போற்றுவோம்!**

**வாழ்க நம் தளபதி ! வெல்க திராவிட நாயகர் !**

# “அப்பா, அப்பா...!”

**‘நான் முதல்வன்’ திட்டத்தின் மூலம் பயிற்சி பெற்று குடிமைப் பணி தேர்வில் பெண்கள், ஆண்கள் பலர் தேர்ச்சி பெற்று அவர்கள் எல்லாம்; ‘நான்முதல்வன் திட்டத்தில் சேர்ந்து பயிற்சி பெற்று வெற்றி பெற்றேன்’ என்று சொல்லும் போது அப்பாவிற்கு ஆனந்தக் கண்ணீர் ஏற்படும் பாருங்கள், அதனை வார்த்தைகளால் விவரிக்க முடியாது.! அந்த ஆனந்தக் கண்ணீர் தான்; இன்றைக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கண்களில் காண முடிகிறது.!**

பசி அறிந்து உணவு ஊட்டுபவள் அம்மா!

மகனுக்கோ, மகளுக்கோ தேவையானவற்றை, அவர்கள் கோரிக்கை வைக்காமலே அதனை வாங்கிக் கொடுத்து பிள்ளைகள் முகத்தில் மகிழ்ச்சியைக் கண்டு பூரிப்படைபவர் அப்பா!

இந்தச் சமுதாயத்தில் மகனின் வாழ்க்கை தன்னை விட மேன்மையாக இருக்க வேண்டும் என்று ஆலோசனைகளை வழங்கி அவனுக்குத் தேவையான அழியாச் செல்வமான கல்விச் செல்வத்தை வழங்கி வாழ்க்கையில் ஒரு பிடிப்பினை ஏற்படுத்திக் கொடுப்பவர் அப்பா!

மகன், மகள் மனதில் உள்ள குறிப்பினை அறிந்து அதனை செயல்படுத்தி அவர்களின் கனவை நிறைவேற்றுபவர் அப்பா!

அப்படித்தான் இதோ நமது முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை; இன்றைக்கு தமிழ் நாட்டில் பள்ளிச் சிறார்கள், கல்லூரி மாணவ, மாணவியர் “அப்பா, அப்பா...” என்று நெகிழ்ச்சி யுடன் அழைக்கும் காட்சிகள் தமிழ்நாடு முழுவதும் இன்றைக்கு எதிரொலித்துக் கொண்டிருக்கினறன.

அதற்குக் காரணம் என்ன?

பள்ளிகளில் படிக்கும் சிறார்கள் காலை



யில் சாப்பிடாமல் வந்து விடுகிறார்கள். **ஒரு பள்ளிக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆய்வுக்குச் சென்ற போது, ஒன்றாம் வகுப்பு படிக்கும் சிறுவன் ஒருவன் சோர்வுடன் இருப்பதை பார்த்து ‘என்ன சாப்பிட்டே...?’ என்று வினவிட, அச் சிறுவன், ‘சாப்பிடவில்லை’ என்று சொன்ன பதில் தான் சிறார்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டம்.** இத்திட்டத்தை நமது முதல்வர் தொடங்கி வைத்து, சிறார்களின் பசிப்பிணியை போக்கினார்!

பிள்ளைகள் கல்வியில் உயர்ந்த படிப்பு படித்திட வேண்டும், வேலைவாய்ப்பில் உயர் நிலை பெற்று, வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்பதுதான் ஒவ்வொரு அப்பாக்களின் கடமையாகும், அதுதான் அவர்களின் கனவுமாகும்.

**தமிழ்நாட்டில் கல்லூரியில் படிக்கும் ஒவ்வொரு மாணவ - மாணவிகளுக்கும் அவர்களின் அப்பா வழியில் நின்று உருவாக்கப்பட்ட திட்டம்தான் புதுமைப் பெண், தமிழ்ப்புதல்வன் திட்டம்!**

பெண்கள் பட்டம் பெற்றிட வேண்டும் என்றால் அவர்களின் கல்விச் செலவிற்குத் தேவையான உதவியினை வழங்கிட வேண்டும் என்று எவரும் கோரிக்கை வைக்காமலேயே கல்லூரிகளில் படிக்கும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் புதுமைப்பெண் திட்டத்தை தொடங்கி வைத்தார் நமது முதல்வர். இன்றைக்கு ஆண்டுக்கு ஆண்டு கல்லூரிகளில் படிக்கும் பெண்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே போகிறது. தனது மகள் கல்லூரி சென்று பட்டம் பெற வேண்டும் என்பது ஒரு அப்பாவின் கனவு தானே; அந்தக் கனவை அவர்களின் வழியில் நின்று நிறைவேற்றி வருகிறார் நமது முதல்வர்!

வீட்டில் அக்காவிற்கு, தங்கைக்கு மட்டும் அப்பா பணம் கொடுத்தால், எப்போதும் அவளுக்குத் தான் நீங்கள் செல்லம் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள், என்னை கண்டு கொள்ளவே மாட்டேன் என்கிறீர்கள் என்று செல்லமாக மகன் கேட்பான், இது பல குடும்பங்களில் நடைபெறும் வாடிக்கையான சம்பவமாகும்.

அப்படித்தான் கல்லூரியில் படிக்கும் பெண்களுக்கு மட்டும் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்குகிறீர்கள், எங்களுக்கு இல்லையா? என்று மாணவர்களின் குரல் முதல்வருக்கு கேட்டதால் உருவான திட்டம் தான், கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் ‘தமிழ்ப்புதல்வன் ’ திட்டமாகும். கல்லூரி மாணவர்களின் ‘அப்பா’ வழியில் நின்று நிறைவேற்றினார் நமது முதல்வர்!

படித்து பட்டம் பெற்றாகி விட்டது, அடுத்து வேலை வேண்டும். அதுவும் இந்தக் காலத்தில் வேலை கிடைப்பது குதிரை கொம்புதான். வேலை என்பதே எட்டாக் கனி தான்.

மகனோ, மகளோ பட்டம் பெற்றவுடன், அடுத்து வேலை கிடைக்க ‘அப்பா’ பல முயற்சிகளை மேற்கொள்வார். அப்படி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க “நான் முதல்வன்” திட்டத்தை தொடங்கி வைத்து இன்றைக்கு இளம் பெண்களும், இளம் ஆண்களும் பல்வேறு பெரிய பெரிய நிறுவனங்களில் வேலை கிடைத்து பணியாற்றிட பல்வேறு தொழில் வளர்ச்சி திட்டங்களை கொண்டு வந்து வழி வகை செய்தார் நமது முதல்வர்!

**‘நான் முதல்வன்’ திட்டத்தின் மூலம் பயிற்சி பெற்று குடிமைப் பணி தேர்வில் பெண்கள், ஆண்கள் பலர் தேர்ச்சி பெற்று அவர்கள் எல்லாம்; ‘நான்முதல்வன் திட்டத்தில் சேர்ந்து பயிற்சி பெற்று வெற்றி பெற்றேன்’ என்று சொல்லும் போது அப்பாவிற்கு ஆனந்தக் கண்ணீர் ஏற்படும் பாருங்கள்,**

**அதை வார்த்தைகளால் விவரிக்க முடியாது.!**

அந்த ஆனந்தக் கண்ணீர் தான்;

இன்றைக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கண்களில் காண முடிகிறது.!